பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 19] சென்னை: மார்கழி 14 (29—12—71) புதன் | வெளியூர்: மார்கழி 15 (30—12—71) வியாழன் [இதழ்: 164

தமிழ்நாட்டுக்குப் பரிசு

சென்னை, டிச 29—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கான தேசியப் பரிசு தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும்வாய்ப்பு காணப்படுகிறது.

மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு நிர்ணயித்த இலக்கு ஆண்டு முடிவதற்கு 3 மாதங்களுக்கு முன்னமே நிறைவேறிவிட்டது.

ஆசியாவில் புயல் மூளுமாம்

பாகிஸ்தானின் புதிய பூச்சாண்டி!

கனவுலகிலிருந்து பூட்டோ பிதற்றல்-- வங்க தேச மக்களுக்காக முதலைக்கண்ணீர்

புதுடில்லி, டிச. 29—

'அடுத்த சில மாதங்களில் ஆசியாவில், எந்த நேரத்திலும் புதிய புயல் மூளக்கூடும்; இந்தியாவுடன் பாகிஸ்தான் இன்னும் போர்க்கோல நிலையிலேயே இருக்கிறது

"இந்தியாவால் பாகிஸ்தான் தோற்கடிக்கப்படவில்லை; பல சந்தர்ப்பங்களாலேயே அது தோற்றிருக்கிறது.

"எதிர்காலத்தில் புதிய எழுச்சி நிச்சயம் உருவாகும்; ஆகவே கவலைப்பட வேண்டியதில்லை"

என்றெல்லாம் பாகிஸ்தான் வானொலி, தன்னுடைய செய்தி ஒலிபரப்பில் அச்சுறுத்தியிருக்கிறது. அதே நேரத்தில், பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, வரவேற்பு ஒன்றின்போது அந்நிய நாட்டுத் தூதர்கள் -- செய்தியாளர்களிடை -- வங்காள தேசத்தின் உண்மை நிலவரத்தைச் சந்திக்க மறுக்கும் போக்கில் பேசுகையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

"அந்நிய நாடு ஒன்றினால் நிர்ப்பந்தமாகக் கைப்பற்றப்பட்ட என்னுடைய நாட்டின் ஒரு பகுதி சம்பந்தமாக -- குறிப்பாக மேற்கு -- கிழக்குப் பாகிஸ்தான் தலைவர்களிடையே நாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும்போது மற்ற நாடுகள் அவசரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்குமானால், இந்த நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயமாகப் பகை நடவடிக்கையாகக் கருதுவோம்; எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய இடங்களில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

"கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள என்னுடைய சகோதரர்களே -- கவலைப்படாதீர்கள்; நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்போம்!

"பாகிஸ்தான் பிரிக்க முடியாதது -- பாகிஸ்தான் ஒன்றாகவே இருக்கும்; எந்தச் சக்தியாலும் -- படை பலத்தாலும் பாகிஸ்தானைப் பிரிக்க முடியாது.

"சிரமமான நாட்கள் போய்விட்டன; மக்களுடைய விருப்பத்துடனும் -- ஒப்புதலுடனும் ஒரு புதிய, பெரிய பாகிஸ்தானை நிர்மாணிப்போம்".

கேட்டதற்கு, பூட்டோ பதிலளித்ததாவது:—

"இந்த இடத்தைவிட்டு அவர் செல்லலாம் என்று நான் அவரிடம் கூறியிருக்கிறேன்; ஆனால் சில பிரச்சினைகள் தெளிவாக்கப்பட வேண்டியிருக்கிறது; சில நடைமுறைகளையும் நிறைவு செய்யவேண்டியிருக்கிறது."

"மேற்குப் பாகிஸ்தானில் ஷேக் முஜிபுர் ரகிமான் எவ்வளவு காலம் இருப்பார்" என்று கேட்டபோது அவர் கூறியதாவது:—

"நான் அதனைக் கூறுவதற்கில்லை; ஆனால், பாகிஸ்தான் அவரது நாடு ஆகும்.

"பாகிஸ்தானின் ஒருமைப்பாட்டையும் -- ஐக்கியத்தையும் எண்ணி, திருப்திகரமான உடன்பாட்டுக்கு முயற்சிப்பதில் பாகிஸ்தான் மக்களின் ஆசி உண்டு என்று எனக்குத் தெரியும்.

வழி முறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றனவாம்

அதே கூட்டத்தில் அதிபர் பூட்டோ, மேலும் கூறியதாவது:—

"ஷேக் முஜிபுர் ரகிமானை நேற்று நான் சந்தித்துப் பேசினேன்; அவரது விடுதலைக்கான வழிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஷேக் முஜிபுர் ரகிமானின் விடுதலைக்கான வழிமுறைகளில் என்னுடைய அரசு கவனம் செலுத்திவருகிறது.

'கிழக்குப் பாகிஸ்தானின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி' முஜிபுருடன் நான் பேச்சு நடத்தத் துவங்கியிருப்பதை இதர நாடுகள் கவனத்தில் கொள்ளும் என்று நம்புகிறேன்; அவசரப்பட்டு வங்க தேசத்தை அந்நாடுகள் அங்கீகரிக்கக்கூடாது."

"ஷேக் முஜிபுர் ரகிமான் இன்னமும் வீட்டுக் காவலில்தான் இருக்கிறாரா?" என்று நிருபர்கள்

அவர் கூறினர்.

இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்வதை வங்க தேச அரசு எதிர்ப்பதாகக் கூறினர்.

இராணுவ ஒப்பந்தங்கள் எதிலும் எவ்வித சம்பந்தமுமில்லாத கூட்டுச் சேரா சுதந்திர வெளிவிவகாரக் கொள்கையை தமது நாடு பின்பற்ற விரும்புகிறது என்று அவர் சொன்னர்.

சீனு பயணம் இல்லையாம்

பூட்டோ கூறுகிறர்

"சீனவுக்கோ--சோவியத் இரஷ்யாவுக்கோ-அமெரிக்காவுக்கோ செல்லும் திட்டம் ஏதுமில்லை"

என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ தெரிவித்திருக்கிறர்.

"பாகிஸ்தான் சீரமைப்புக்கான பெரும் பணியில், அவகாசம் கிடைக்கும்போது என் நாட்டிலேயே சுற்றுப்பயணம் செய்யப் போகிறேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

போர் படைத்த புதிய வரலாறு

சவாண் விளக்கம்

சதாரா, டிச. 29—

"போரில் இந்தியா அடைந்துள்ள வெற்றி கண்டு எரிச்சல் அடைந்துள்ள நாடுகள் நம்மீது தொடர்ந்து துவேஷம் பாராட்டுகின்ற வரையில் பாகிஸ்தானுடன் போர்முடிந்துவிட்டதாகக் கருதுவது புத்திசாலித்தனமானது அல்ல"

என்று நிதியமைச்சர் ஒய். பி. சவாண், இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

'அண்மையில் நடைபெற்ற போர் ஒரு வரலாற்றைப் படைத்துள்ளது; பிற நாடுகளைப் பிடிப்பதற்காகச் சாதாரணமாகப் போர்கள் நடக்கும்; ஆனால் இந்தப் போர், எழரைக் கோடி மக்களைக் கொண்ட ஒரு புதிய நாடு பிறப்பதற்கு உதவியது.'

'குறை கூறி எழுதாதீர்' எனப் பத்திரிகைகட்கு வேண்டுகோள்

வல்லரசுகளையும், இதர வெளிநாடுகளையும் குறை கூருமலிருக்குமாறு உள்நாட்டு நிருபர்களைப் பூட்டோ கேட்டுக்கொண்டார்; 'அமெரிக்கப் பத்திரிகைகள் -- பிரிட்டிஷ் பத்திரிகைகள் என்ன கூறுகின்றன என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறீர்கள்; தயவுசெய்து அவற்றை மறந்து விடுங்கள்; நீங்கள் எழுதுவதற்கு வேறு பல பிரச்சினைகள் உள்ளன; இந்தியா உட்பட வெளிநாடுகளைக் குறை கூறி எழுதாமலிருப்பதே மேலானதாகும்' என்றும் கேட்டுக் கொண்டார்.

மகிழ்ச்சியற்ற சந்திப்பாம்

இராவல்பிண்டி, டிச. 29—

வங்க தேசத் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமானுடன் தாம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருப்பதாகப் பாகிஸ்தான் அதிபர் ஜுல்பிகர் அலி பூட்டோ முதல் தடவையாகப் பகிரங்கமாக உறுதி செய்துள்ளார்.

"நான் இப்போதுதான் முஜிபைச் சந்தித்தேன்; இந்தச் சந்திப்பு மகிழ்ச்சியற்றதல்ல" என்றும் அவர் கூறினர்.

சிறையிலிருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ள முஜிபுடன் பூட்டோ பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருக்கிறர் என்பதுபற்றி அவரிடமிருந்து கிடைத்த முதல் தகவல் இதுதான்.

கடந்த புதன்கிழமையன்று, அதிபரின் மாளிகையையொட்டியுள்ள ஒரு கட்டடத்திற்கு முஜிப் மாற்றப்பட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

வீண் கனவு வேண்டாம்

பூட்டோவுக்கு வங்க தேசத் தலைவர் இடித்துரை

டாக்கா, டிச. 29—

"இஸ்லாமாபாத் ஆட்சியின்கீழ் மீண்டும் வங்க தேசத்தைக் கொண்டுவர முடியும் என்ற கனவு காணவேண்டாம்" என பாகிஸ்தான் அதிபர் பூட்டோவை வங்க தேசத்தைத் தற்காலிகக் குடியரசுத் தலைவர் நஸ்ருல் இஸ்லாம் எச்சரித்தார்.

"மேற்குப் பாகிஸ்தானை ஆளவேண்டும் என்ற பூட்டோவின் நீண்ட நாளைய கனவு நனவாகிவிட்டது; எனினும், வங்க தேசத்தையும் ஆளுவது என்ற அவரது கனவு பலிக்காது; யாகியாகானுக்கு ஏற்பட்ட கதியே அவருக்கும் ஏற்படும்" என்றும் அவர், செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டினர்.

மேற்குப் பாகிஸ்தான் மக்களுக்கு அவர் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்; 'பஞ்சாபிகள் -- பலுச்சிகள் -- பட்டாணியர் ஆகியோர் கடந்த 24 ஆண்டுகளாகத் தங்களது கலாச்சார--- மொழி சுதந்தரத்தைத் திரும்பப் பெறவும், இராணுவ--பிரபுத்துவ கும்பலின் பிடியிலிருந்து விடுபடவும் போராடி வருகின்றனர்' என்று அவர் கூறினர்.

மேற்குப் பாகிஸ்தான் மக்களின் நன்மையை விரும்பினால் வங்க தேசம் ஏற்பட்ட உண்மை நிலையை (மெய்ப்பாடு) ஏற்றுக் கொண்டு, முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுவிக்குமாறு பூட்டோவை அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தியத் துணைக்கண்டத்திலும், தென் கிழக்கு ஆசியாவிலும் உலகிலும் சமாதானம் நிலவ உதவுமாறு பூட்டோவைக் கேட்டுக் கொண்டார். தாங்கள் போரை விரும்பவில்லை என்றும், சமாதானத்தையே விரும்புவதாகவும் அவர் சொன்னர். சமாதான முயற்சியை மேற்கொள்ளுமாறு பூட்டோவைத் தாம் கேட்டுக்கொள்வதாக

தேசியப் பாதுகாப்பு நிதி

ஒரு முக்கிய அறிவிப்பு

தேசியப் பாதுகாப்பு மாநிலக் குழுவில் முடிவெடுத்தவாறு தமிழக அரசின் சார்பில் திரட்டப்படுகின்ற பாதுகாப்பு நிதிக்கு ஏற்கனவே அறிவித்துள்ளபடி, 'தேசியப் பாதுகாப்பு நிதி' என்ற தலைப்பில், தமிழக அரசு தலைமைச் செயலகத்துக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கோதான் நிதியினை அனுப்பவேண்டும்.

தனிப்பட்ட எவருடைய முகவரிக்கும் பாதுகாப்பு நிதி அனுப்ப வேண்டாம் என்று பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

-- தமிழ்நாடு அரசு

இந்திய விரோதப் போக்கை கைவிட்டு வங்க தேசத்தை அங்கீகரிக்கட்டும்

புதியபாகிஸ்தான் ஆட்சியாளர்கட்கு இந்திரா காந்தி அறிவுரை

அமெரிக்காவின் அபத்தப் பிரச்சாரத்துக்குக் கடும் கண்டனம்

புதுடில்லி, டிச. 29—

"பள்ளிக்கூடக் குழந்தைகள் உட்பட அமெரிக்கக் குடிமக்களிடமிருந்து எங்களுக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்துள்ளன; அதே சமயத்தில், துணைக்கண்டத்தில் அமெரிக்காவோ அல்லது சீனாவோ இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டால் தலையிடுவதாக இரஷ்யாவிடமிருந்து எங்களுக்கு உறுதிகள் கிடைத்ததாக அமெரிக்காவில் அபத்தமான பேச்சு நிலவுவதைக் குறிப்பிட விரும்புகிறேன்; இப்பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் சோவியத் இரஷ்யாவுடன் பேசப்படுவதில்லை.

"இவ்வளவுக்கும் பிறகு நான் எப்பேர்ப்பட்ட நபர் — இந்தியா எப்படிப்பட்ட நாடு என்பதை அமெரிக்கா உணர மறுத்தால், என்ன நடக்கும் என்பதையும் — எப்படிப்பட்ட உறவு முறை இருக்கும் என்பதையும் என்னால் சொல்ல இயலாது.

"பாகிஸ்தானுடன் போரை நிறுத்தும்படி இந்தியாவை இரஷ்யா நிர்ப்பந்தித்ததாகக் கூறப்படுவதும் தவறான கூற்றாகும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி இரு அமெரிக்கப் பத்திரிகைகளுக்குத் தனித் தனியாக அளித்த பேட்டியில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்; அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலையான தன்மை நிலவுவதானது, பெரிய வல்லரசுகள் — குறிப்பாக அமெரிக்கா — இன்றைய நிலைமையை மெய்ப்பாடு உணர்வுடன் மதிப்பிடுவதையே பொறுத்திருக்கிறது; இந்திய — பாகிஸ்தான் இராசதந்திரத்தை அல்ல!

"அண்மையில், இந்தியா—பாகிஸ்தான் போரின்போது அமெரிக்காவின் தவறான கொள்கையே மேற்குப் பாகிஸ்தானிலிருந்து கிழக்கு வங்காளம் பிரிந்து — வங்காள தேச மக்கள் சனநாயகக் குடியரசு பிறந்ததற்குக் காரணமாகும்.

"நவீன ஆசியாவின் உண்மை நிலவரங்கள் பற்றி அமெரிக்காவில் அதிக அளவு மெய்ப்பாடு உணர்வு தேவையாகும்.

"அமெரிக்கா விரும்பினால் உறவு நிலை மீண்டும் இயல்பான நிலைமைக்குத் திரும்பக்கூடும்; என்னைப் பொறுத்தவரையில் அவை இயல்பான முறையிலேயே இருக்கிறது; எனக்கு அமெரிக்காவிடம் விரோதம் எதுவும் கிடையாது; ஆனால் முன்பு செய்ததைப்போல், மற்ற நாடுகள் பாகிஸ்தானை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்போவதில்லை.

"எந்த நபர் அல்லது எந்த நாட்டின் நிர்ப்பந்தத்துக்கும் நான் பணிபவளல்ல!

இரஷ்யாவும் — நாங்களும் நண்பர்கள்; நாங்கள் எப்போதும் நண்பர்களாக இருந்துவந்திருக்கிறோம்; ஆனால் நாங்கள் செய்யும் முடிவு இரஷ்யாவினால் பாதிக்கப்படமாட்டாது; எந்தக் கோஷ்டியிலும் நாங்கள் சேரமாட்டோம்."

"பாகிஸ்தான் தயாரானதும், அதனுடன் இந்தியாவின் உறவு சீர்திருந்தும்; வெளிநாடுகள் தலையிடாமலிருந்தால், இயல்பான உறவு ஏற்பட முடியும்—ஏற்படும் என்று நம்புகிறேன்.

ஷேக் முஜிபுர் ரகிமானை பாகிஸ்தான் விடுதலை செய்தால் அது சமூக உறவு ஏற்பட உதவும்.

பாகிஸ்தான் நினைத்திருப்பது இந்தியாவின் நலனுக்கு உகந்ததாகும்; பூட்டோ தலைமையில் உள்ள புதிய பாகிஸ்தான் அரசுடன் சமுகமான—நேச பாவமான நிலைத்த உறவு இருக்க வேண்டும்.

வங்காள தேசம் ஏற்பட்டுவிட்டது என்பதை உணர்ந்து— அதனுடன் புதிய பாகிஸ்தான் அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்; இந்தியாவுடன் தன்னுடைய எதிர் மறையான போக்கைக் கைவிட வேண்டும்.

வீராணம் திட்டம் விரைந்து நிறைவேறும்

அந்நியச் செலாவணிக்கு அனுமதி கிடைத்துவிட்டது

மதுரையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

மதுரை, டிச. 28—

"சென்னை நகருக்குக் காவிரி நீரைக் கொண்டுவருவதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டது"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், மதுரையில் செய்தியாளரிடம் கூறினார்.

"அந்நியச் செலாவணிக்கு அனுமதி கிடைக்காததால்தான் இத்திட்டம் தாமதப்பட்டது" என்று அவர் சொன்னார்.

"அந்நியச் செலாவணியை ஒதுக்குமாறு கோரி 1969-ல தமிழக அரசு விண்ணப்பித்தது; 1971-ம் ஆண்டு நவம்பரில்தான் இதற்கு அனுமதி கிடைத்தது" என்றும் அவர் கூறினார்.

எஸ். ஜே. சாதிக் பாட்சா

"இந்தத் திட்டம் சிரமமில்லாமல் இப்போது விரைவாக நிறைவேற்றப்படும்" என்று பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ் ஜே. சாதிக் பாட்சா அவர்கள் கூறினார்.

தமிழகத்தில் மற்றொரு செங்கல் தொழிற்சாலை

ரூ. 62 இலட்சம் முதலீட்டில் தனியார் துறையில் அமைகிறது

சென்னை, டிச. 28—

தமிழகத்தில் மூன்றாவதாக ஒரு செங்கல் தொழிற்சாலை அமைகிறது; இது, வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்திலிருந்து இயங்கத் துவங்கும்.

ரூ. 62 இலட்சம் செலவில் அமையும் இந்தத் தொழிற்சாலை நாளுக்கு ஐம்பதாயிரம் செங்கல் தயாரிக்கும்; இதன் உச்சகட்ட உற்பத்திச் சக்தி நாளுக்கு 66,000 செங்கல் ஆகும்.

இத்தொழிற்சாலையில் ஆண்டுக்கு ரூ. 20 இலட்சம் வரை வியாபாரம் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஓடுகளையும் மற்றத் துணைப் பொருள்களையும்கூடத் தயாரிக்க இந்தத் தொழிற்சாலையினர் திட்டமிட்டுள்ளனர்.

மதுராவாயலில் 42 ஏக்கர் பரப்பில் இத்தொழிற்சாலையில் அமைந்துள்ளது.

போர்க் கைதிகள் பரிமாற்றம் எப்போது?

பாகிஸ்தான் தரப்பில் முயற்சி ஏதுமில்லை

இந்திய எதிர்ப்பு பிரசாரம் மட்டும் தொடருகிறது

புதுடில்லி, டிச. 28—

இந்தியாவிடம் இருக்கும் போர்க் கைதிகளைப் பரிமாற்றம் செய்து கொள்வது குறித்தோ — தளுப்புகளைத் திரும்பப் பெறுவது குறித்தோ பேச்சுவார்த்தை நடத்த இதுவரையில் பாகிஸ்தான் முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை; ஆனால் அதே நேரத்தில் — பாகிஸ்தான் தலைவர்கள், இன்னமும் இந்தியாவுக்கு எதிராகப் பேசிக்கொண்டு வருவது பற்றி இந்தியா கவலை கொண்டிருக்கிறது.

சரணடைந்த சுமார் ஓர் இலட்சம் பாகிஸ்தான் இராணுவத்தினர் இப்போது இந்தியாவிடம் இருக்கின்றனர்.

இவர்களுக்கு ஜினீவா கோட்பாட்டின்படி முழுப் பாதுகாப்பும் அளிப்பதாக இந்தியா உறுதி கூறியிருக்கிறது.

ஆ[illegible] தங்களது அதிகாரத்தை [illegible]தி சில இராணுவத்தினர், வங்க தேசத்தில் கொடுமை புரிந்திருக்கின்றனர்; இவர்களை விசாரித்துத் தண்டிக்க வங்க தேச அரசு முடிவு செய்திருக்கிறது.

இப்படித் தண்டிக்கப்பட வேண்டியவர்களை வங்க தேச அரசு கேட்டுக் கொண்டால் அதனிடம் ஒப்படைப்பது என்று இந்தியா முடிவு செய்திருக்கிறது.

போர்க் கைதிகளுக்கு 50 முகாம்கள்

போர்க் கைதிகளை வைப்பதற்காக மத்தியப் பிரதேசத்தில் 50 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர்; இவைகள் ஒவ்வொன்றிலும் 2,000 பேர் வீதம் வைக்கப்படுவர்.

அடுத்த சில நாட்களில் வங்க தேசத்திலிருந்து எல்லாம் போர்க் கைதிகளும் இங்கு கொண்டுவரப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருமண வயது உயர்த்தப்படும்

மக்கள் பெருக்கத்தைக் குறைக்கும் நடவடிக்கை

புதுடில்லி, டிச. 28—

பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக இப்போது மேற்கொள்ளப்பட்டுவரும் குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன், குறைந்தபட்ச திருமண வயதை உயர்த்துவது பற்றியும் அரசு தீவிரமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

சாரதா சட்டத்தைத் தக்கபடி திருத்துவதற்கான நகல் மசோதாவை, மத்திய சுகாதார — குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை ஏற்கனவே தயாரித்துள்ளது.

"பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 15-லிருந்து 18-க்கும், ஆண்களின் திருமண வயதை 18-லிருந்து 21-க்கும் உயர்த்துவதன்மூலம் பிறப்பு விகிதத்தை 30 சதவிகிதம் குறைக்க முடியும்" என்று அரசு எதிர்பார்க்கிறது.

சாரதா சட்டம் முதலில் 1929-ல் இயற்றப்பட்டது; பின்னர், 1949, 1956-ம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது; அதன்படி, பெண்களின் திருமண வயது 15-க்கும் ஆண்களின் திருமண வயது 18-க்கும் உயர்த்தப்பட்டது.

வங்க தேசத்தை மீட்க முடியுமா?

பூட்டோவுக்கும் நம்பிக்கை இல்லை

இராவல்பிண்டி, டிச. 28—

கிழக்குப் பாகிஸ்தானை மீட்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை" என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ தங்களிடம் கூறியதாக வல்லரசுகளின் தூதர்கள் கூறுகிறார்கள்; எனினும் 'மீட்பதற்கான முயற்சிகளைச் செய்து பார்க்க விரும்புகிறேன்' என்று கூறினாராம்.

90,000 பேரைக் கொண்ட படை சரணடைய நேரிட்டது மேற்குப் பாகிஸ்தான் மக்களுக்கு மனச்சோர்வை உண்டுபண்ணியிருக்கிறது; எனவே, கிழக்குப் பகுதியை மீட்க உழைப்பதாகச் சொல்லி அவர்களுக்குத் தெம்பூட்டவே பூட்டோ இப்படிப் பேசினார் என்று கருதப்படுகிறது.

'வங்கதேசம் போனது போனதுதான்' என்ற நிலையை இறுதியாக மக்கள் ஏற்பதற்கு வழி செய்வதே மீட்சிப் பேச்சின் நோக்கம் என்று கருதப்படுகிறது.

உலக நாடுகளிடம் பூட்டோ கெஞ்சல்

முஜிபுர் ரகிமானுடன் பேசி வங்காள தேசத்துடன் ஏதாவது பிணைப்புக்கான சாத்தியக்கூறுகளை தான் ஆராயும் வரையில் வங்காள தேசத்தை அங்கீகரிக்க வேண்டாம் எனப் பல நாடுகளை பூட்டோ வற்புறுத்தியதாக அமெரிக்கப் பத்திரிகைகள் தெரிவித்தன.

நாடு முழுவதும் அகல இரயில் பாதை

'ரூ 2,000 கோடி தேவை' என்கிறார் மத்திய அமைச்சர்

மதுரை, டிச. 28—

"ஐதராபாத் — பெங்களூர் — மதுரை ஆகியவற்றை இணைத்து டில்லியிலிருந்து கன்னியாகுமரிக்கு நேரடி இரயில் விடும் சாத்தியக்கூறு பற்றி இரயில்வேத் துறை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது; நாடாளுமன்ற வரவு — செலவுக் கூட்டத் தொடருக்கு முன் இத்திட்டம் உருவாகக் கூடும்"

என்று இரயில்வே அமைச்சர் கே. அனுமந்தையா கூறினார்.

எல்லா மீட்டர் கேஜ் பாதைகளையும் அகலப் பாதைகளாக்கத் தம்முடைய துறை திட்டமிட்டிருப்பதை அமைச்சர் உறுதிப்படுத்தினர்.

இத்திட்டத்திற்கு ரூ. 2,000 கோடி தேவைப்படும் என்றும், இதை நடைமுறைப்படுத்த அவகாசம், தேவைப்படும் என்றும் கூறினர்.

ஓடிவிட்ட தொழிலதிபர்களின் நிறுவனங்கள்

வங்க தேச அரசின் உடைமையாக்கப்பட்டன

தனி இராணுவம் — போலீசுப் படைகள் அமைக்கவும் முடிவு

டாக்கா, டிச. 28—

நாட்டை விட்டு வெளியேறிவிட்ட பல தொழிலதிபர்களின் ஆலைகள் — நிறுவனங்களை அரசாங்கமே மேற்கொள்ளும் வகையில், வங்க தேச அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

சுமார் 70 முதல் 80 சதவிகிதம் வரையிலான நிறுவனங்களின் அதிபர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருப்பதாகக் கருதப்படுகிறது.

வங்க தேசப் பொருளாதாரத்தைச் சீர்திருத்த மேலும் பல உத்தரவுகளையும் அரசு பிறப்பித்திருக்கிறது.

இதுவரையில், பாகிஸ்தான் அரசு பாங்கியாகச் செயல்பட்டுவந்த பாங்கியை வங்க தேச பாங்கியாக மாற்றியும், வரிகள் போன்றவற்றைத் தொடர்ந்து வசூலிக்கவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

வங்க தேசத்துக்காகத் தனித் தரைப் படை — கடற்படை — போலீசுப் படை ஆகியவைகளை நிறுவவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேலும் புதிய அமைச்சர்கள்

வங்க தேச அமைச்சரவை இப்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது; இதுவரையில் நான்கு பேராக இருந்த அமைச்சரவை இப்போது 9 பேராக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

தமிழகத் திட்ட அளவு

'அதிக மாறுதல் இராது' என முதல்வர் நம்பிக்கை

'குறைக்க நேரிடினும் நெருக்கடி நிலையைக் கருதி ஏற்போம்' என அறிவிப்பு

தஞ்சாவூர், டிச. 28—

'நாட்டு நெருக்கடி நிலையைக் கருதி மாநிலத்தின் நான்காவது திட்டத்தில் எந்தவிதமான மாறுதல்களையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருவாரூரில் செய்தியாளர்களிடம் கூறினர்.

எனினும், 'திட்ட அளவு மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படமாட்டாது' என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இத்திங்கள் 30, 31-ம் நாட்களில் இது சம்பந்தமாகப் புதுடில்லியில் தலைமையமைச்சரையும், மற்ற அதிகாரிகளையும் சந்தித்து, தமிழ் நாட்டின் தேவைகளைத் தெரிவிக்கப் போவதாகக் கூறினர்.

"தஞ்சாவூர் மாவட்டத்திலும் மற்ற இடங்களிலும் சம்பா நெல் அறுவடையின்போது இப்போதைய 25 சதவிகிதக் கொள்முதல் லெவி முறை நீடிக்கும்" என்றார்.

போரைப்பற்றிச் சிந்திக்கவே இரண்டாண்டு பிடிக்கும்

சீரழிந்த பாகிஸ்தானின் அவலநிலை

பாதுகாப்புத் துறை நிபுணர் கூறும் கருத்து

புதுடில்லி டிச. 29—

"அடுத்த இரண்டாண்டுகளுக்குப் பெரிய அளவில் போரில் ஈடுபடப் பாகிஸ்தானால் முடியாது; அமெரிக்காவும் — சீனாவும் முழு அளவில் ஆயுத உதவியை அளித்தால் நிலைமை மாறலாம்"

என்று பாதுகாப்பு விவகார நிபுணர் கர்னல் ஆர். இராமாராவ் கருத்து தெரிவித்திருக்கிறார்; அவரது மதிப்பீடு வருமாறு :—

"பல டிவிஷன்கள் சிதைந்து போயிருக்கின்றன; புதிய ஆட்களைப் பொறுக்கி எடுத்துப் பயிற்சித் தர குறைந்தது ஓரண்டாவது தேவையாகும்.

பல ஜெனரல்களுக்கும் பூட்டோ ஓய்வு அளித்து விட்டார்; கிழக்கு வங்கத்தில் ஒரு பெரிய படையைச் சரணடையும்படி நேரிட்டதன் விளைவாக, அதைச் சேர்ந்த பல இராணுவத் தலைவர்களை மேலும் விலக்கவேண்டியிருக்கும்; இதன் விளைவாக, முப்படைகளின் தலைமைப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

கிழக்குப் பகுதி இழப்பை அடுத்து இந்தியா தன்னிச்சையாகப் போர் நிறுத்தத்தை மேற்கு முனையில் அறிவித்ததுடன், எஞ்சியுள்ள தமது இராணுவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இராணுவத் தலைமையினர் அதற்கு இசைவு கூறினர்; இதன்மூலம், தமது செல்வாக்கு மங்காமல் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்; அது பலிக்கவில்லை.

பாகிஸ்தானிடம் எட்டு டிவிஷன் குரூப்புகள் இருக்கின்றன; ஓராயிரம் டாங்கிகள் உருப்படியாக இருக்கக்கூடும்.

பெரிய அளவில் போரில் ஈடுபட இயலாத நிலைமையிலும் தொல்லை தரும் நடவடிக்கைகளில் ஈடுபடப் பாகிஸ்தானால் முடியும்; முன்னர் போலவே; இனியும் காஷ்மீருக்குள் ஊடுருவல்காரர்களை அனுப்பி விஷமம் செய்யக்கூடும்; காஷ்மீரைக் கைப்பற்ற முயற்சியும் செய்யலாம்; ஆனால், அமெரிக்கா — சீனாவும் ஆதரிக்காவிடில், இதுவரைபோலவே இனியும் இந்தத் தாக்குதல்களைச் சமாளிக்க நமது படைகளால் முடியும்."

அமெரிக்காவின் ஏமாற்றம்

வங்காள தேசத்தில் இந்திய இராணுவத்தினர் அடைந்த வெற்றி — மேற்குப் பாகிஸ்தானுக்கு எதிராக வங்காள தேசத்தில் நிலவும் கடுமையான கருத்து ஆகியவை குறித்து அமெரிக்கா ஏமாற்றமடைந்திருப்பதாகத் தோன்றுகிறது; 'சீனா தலையிடும்' என்று அது நம்பிக்கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில் எல்லாக் கட்சிகளும் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் இருந்ததும், மக்கள் அனைவரும் அரசுக்கு முழு ஆதரவு அளித்ததும் ஐ.நா.-வில் பல நாடுகளின் மனத்தில் வெகுவாகப் பதிந்துள்ளது.

கூட்டுறவு விரிவு அதிகாரிகட்கு ஊக்க ஊதியம்

சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் பெருக வாய்ப்பு

கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அறிவிப்பு

திருச்சி, டிச. 28—

"சமுதாய வளர்ச்சித் திட்ட பிளாக்குகளில் பணியாற்றும் கூட்டுறவு விரிவு அதிகாரிகளுக்கு உற்சாகம் தரும் முறையில் போனசு வழங்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

"100 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள சிறு விவசாயிகள் இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் கூட்டுறவு விரிவு அதிகாரிகளுக்கு ஒரு சங்கத்துக்கு ரூ. 100 வீதம் போனசு அளிக்கப்படும்.

"அது மட்டுமல்லாமல், மாநில முழுவதிலும் எந்த அதிகாரி அதிகமாகச் சிறு விவசாயிகள் கூட்டுறவு இறைவை நீர்ப்பாசனச் சங்கங்கள் அமைக்கிறாரோ அவருக்கு ரூ. 10,000 பரிசும் — கேடயமும் வழங்கப்படும்; அவர், கெசடட் பதிவு அதிகாரியாகத் தகுதி பெற்றவருமாவார்"

என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள், திருச்சி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு விரிவு அதிகாரிகள் கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"இனிமேல், கூட்டுறவு விரிவு அதிகாரிகள் குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகள் போன்ற வேலையைச் செய்யவேண்டியதில்லை; அவர்களுடைய வேலைச் சான்றுகளைக் கூட்டுறவு அதிகாரிகளே எழுதுவார்கள்.

சர்வதேச வளர்ச்சி ஏஜென்சியுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணமாக இந்த மாநிலத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 26 கோடி வழங்கப்பட இருக்கிறது; பல்வேறு வகைக் கிணறுகள் தோண்டுவது போன்ற காரியங்களுக்கு இது பயன்படுத்தப்படும்.

ஒருபுறம் விவசாயிகள் கடனுக்காக அலைமோதிக் கொண்டிருக்க மற்றொருபுறம் பணம் தூங்கிக்கொண்டிருக்கிறது; விரைவில் அதை விநியோகம் செய்ய விரிவுத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சர்வதேச வளர்ச்சி நிறுவனத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைப்படி, ஒவ்வொரு 15 ஏக்கருக்கும் ஒரு கிணறுவீதம் தான் உதவிபெற முடியும்; ஆகவே, ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் உள்ள விவசாயிகள் கூட்டுறவுச் சங்கமாகச் சேர்ந்துதான் பலன்பெற முடியும்.

மத்திய அரசு ஆதரவில் விவசாய சாதன சர்வீசு நிலையங்கள் விரைவில் தொடங்கப்படும்; இவைகளில் ஓர் பொறியரும் — ஒரு டிப்ளமாதாரரும் இருந்து விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறுகள் (போர் வெல்) சம்பந்தமான தொழில் நுணுக்க ஆலோசனை அளிப்பார்கள்."

குமரிக்கு இரயில் பாதை— கலைஞர் கோரிக்கை

விரைவில்விருப்பம் நிறைவேறும் என மத்திய அமைச்சர் பதில்

மதுரை, டிச. 28—

மதுரை மாநகராட்சி மன்றம் அளித்த பாதுகாப்பு நிதியைப் பெற்றுக்கொண்டு முதல்வர் கலைஞர் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"மதுரை மாநகராட்சியின் சார்பில ரூ. 93,000 பாதுகாப்பு நிதியாக அளித்தது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

மத்திய அமைச்சர் அனுமந்தையா அவர்கள் கருநாடக மாநிலத்தைச் சார்ந்தவர்கள். அங்கிருந்து அனுப்பப்பட்டு பெரும் புகழ்பெற்றவர்; அளப்பரிய பணிகளை செயலாற்றிப் பெரும் புகழ் பெற்றவராவர்.

மத்திய அமைச்சரவையில் தக்கதோர் பதவி வகித்து நாட்டின் பல்வேறு காரியங்களில் சிறப்பான முறையில் பணியாற்றுகின்ற நல்ல அமைச்சர்களில் ஒருவரான அவர், இந்தியா முழுவதற்குமான இரயில்வே பொறுப்பை ஏற்றிருக்கின்ற காரணத்தால், தென் மாநிலங்களான கேரளம் — ஆந்திரம் — தமிழகம் — மைசூர் ஆகிய மாநிலங்களின் வளர்ச்சியில் பெரும் அக்கறை செலுத்திவருகின்றனர்.

இங்கு மதுரை மேயர் அவர்கள், 'இரயில்வேத்துறை மதுரை மாநகராட்சிக்கு தரவேண்டிய கடனைத் திருப்பித்தர வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டிருக்கிறார்; ரூ. 12 கோடி இருக்குமென்று எதிர்பார்த்தேன்; ஆனால் ரூ 12 இலட்சம்தான் என்று அறிந்தேன்; தவிர்க்க முடியாத காரணத்தால் தாமதமாக இருக்கக் கூடும்; அதற்கு விரைவில் அனுமதி வழங்கி எங்கள் தொல்லையைத் தீர்க்க வேண்டுமென்று மத்திய அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு நீண்ட நெடுங்காலமாக ஒரு குறை இருக்கிறது; 'தாய்த் தமிழகத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்துக்கு இருப்புப் பாதை இல்லை' என்பதுதான் அது; குமரி மக்களுக்குரிய இந்தப் பிரச்சினையை உரியவர்கள் — மத்திய அரசிடம் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

'தமிழகம் முழுவதற்கும் உரியவன்' என்ற முறையில், 'கன்னியாகுமரிக்கு இரயில்வே பாதை அமைத்திட வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறேன்; அதனை அமைச்சர் அனுமந்தையா செய்துவிட்டால், அது தமிழர்களின் பாராட்டுக்குரிய— அரிய செயலாக இருக்கும்.

கோலார் தங்கவயலை தேசியமயமாக்கிப் புகழ்பெற்றதைவிட, குமரி மாவட்ட இரயில் பாதையை அமைத்தால், தமிழ்நாடு உள்ளளவும் தமிழர்கள் பாராட்டிக்கொண்டே இருப்பார்கள்.

தமிழகத்தின் சார்பில் மத்திய அமைச்சருக்கு இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்."

திரு. அனுமந்தையா தமது உரையில், கன்னியாகுமரி இரயில் பாதைக் கோரிக்கை பற்றிக் கூறியதாவது:—

"முதலமைச்சர் அவர்கள் பேசுகையில் 'கன்னியாகுமரிக்கு இரயில் பாதை போட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

கன்னியாகுமரியை இரயில் மூலம் சென்று சந்திக்க வேண்டுமென்ற உங்கள் முதல்வருடைய விருப்பம் விரைவில் நிறைவேறும்; ஆனால் எப்போது என்பதுதான் பிரச்சினை.

கூடியவிரைவில் கன்னியாகுமரி— திருவனந்தபுரம், அகல இரயில் பாதை போடப்படும்போது நீங்கள் கோரிய இரயில் பாதையும் போடப்படும்.

அடுத்து, பிப்ரவரி—மார்ச் மாதங்களில் வரவுசெலவுத் திட்டக் கூட்டத்தில் இதுபற்றி என்னால் சொல்ல முடியுமென்று கருதுகிறேன்."

நியாய விலையில் சர்க்கரை

சனவரிமுதல் விற்பனை

புதுடில்லி, டிச. 28—

சனவரி 1-ந்தேதியிலிருந்து நாடு முழுவதிலும் நியாய விலைக் கடைகள்மூலம் சர்க்கரை விற்பனை தொடங்கும்.

மத்திய உணவு — வேளாண்மை அமைச்சர் பக்ருத்தீன் அலி அகமது இத்தகவலைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் சர்க்கரையில் 60 சதவிகிதத்தை, நியாய விலைக் கடைகள் மூலம் விற்பதற்காகக் குவிண்டால் (100 கிலோ) ரூ. 150 என்ற விலையில் அரசாங்கத்துக்குக் கிடைக்கச் செய்வதற்காக அரசாங்கத்துக்கும் — சர்க்கரை உற்பத்தியாளர்களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

கரும்புச் சாகுபடியாளர்கட்கு ஒரு குவிண்டால் கரும்புக்கு ரூ. 8-50க்குக் குறையாமல் கிடைப்பதை உறுதி செய்யவும், சர்க்கரைத் தொழில் ஒப்புக்கொண்டுள்ளது.

திருச்சி—தஞ்சை ஆகிய இடங்களிலிருந்து சுற்றுலாப் பேருந்துகள்

தமிழகப் போக்குவரத்துத் துறையில் ஏற்பாடு

அமைச்சர் இராமச்சந்திரன் அறிவிப்பு

திருச்சி, டிச. 28—

"திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலிருந்து சுற்றுலாப் பேருந்துகள் விடுவதெனப் போக்குவரத்துத்துறை முடிவு செய்திருக்கிறது; சனவரி 15 — பொங்கல் நாளிலிருந்து இந்த ஏற்பாடு துவங்கும்"

என்று அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"திருச்சி, மதுரை நகரங்களுக்கு அருகிலுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்களுக்கு இந்தப் பேருந்துகள் சென்று வரும்.

இப்போது சென்னை நகரிலிருந்து விடுமுறை நாட்களில் மாமல்லபுரம் போன்ற இடங்களுக்குச் சிறப்புப் பேருந்துகள் விடப்படுகின்றன; அதேபோன்று மதுரை — திருச்சியிலிருந்தும் சுற்றுலாப் பேருந்துகளைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மதுரையிலிருந்து புறப்படும் சுற்றுலாப் பேருந்துகள் வைகை அணை போன்ற இடங்களுக்குப் போய் வரும்.

திருச்சியிலிருந்து புறப்படும் சுற்றுலாப் பேருந்துகள் கல்லணை, தஞ்சை போன்ற இடங்களுக்குப் போய் வரும்.

மாநிலப் போக்குவரத்துத் துறையினால், 'பொது நிதி' என ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது; ஒரு பேருந்துக்கு ரூ 200 வீதம் இந்த நிதியில் பணம் போடப்படுகிறது; இது, இன்ஷ்யூரன்சு தொகை போன்றதாகும்; சேதமான பஸ்களைப் பழுது பார்க்க இந்த நிதி பயன்படுத்தப்படும்.

பணியில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் எந்த நேரத்திலும் விபத்து ஏற்படாத முறையில் பஸ்ஸை ஓட்டிய ஓட்டுநருக்கு, ஓய்வு பெற்ற பின்னர், ஓராண்டுக் காலப் பதவி நீடிப்பு கொடுக்கப்படும்.

சென்னை நகரில் போக்குவரத்துத் துறையில் போதுமான அளவுக்கு நல்ல ஓட்டுநர்கள் இல்லை.

எஸ். ஆர். வி. எஸ். — சக்தி விலாஸ்—ராமன் அண்டு இராமன் பஸ்களை விடுவதற்கான கார்ப்பரேஷன் பிப். 1-ந்தேதி ஏற்படும்.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் பஸ் போக்குவரத்து இந்தக் கார்ப்பரேஷனின் அதிகார வரம்புக்குள் இருக்கும்."

மாயூரம் ந. சு. மறைவு

பழம்பெரும் சுயமரியாதை இயக்க முன்னணி வீரரும் — பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமானவரும் — மாயூரம் வட்டத்தில் தி.க., தி.மு.க., வளர்ச்சியடைய வித்தூன்றியவருமான மாயூரம் என். சுப்பிரமணியம், டிச. 16-ம்நாளன்று மாயூரத்தில் இயற்கையெய்தினர்.

செய்தியறிந்த மாயூரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் என். கிட்டப்பா சென்னையிலிருந்து விரைந்து வந்து, தன்னைக் கழகத்தில் ஈடுபடுத்திடக் காரணமாயிருந்த பெரியவருக்கு இறுதிமரியாதை செலுத்தினர்.

மாயூரம் நகர தி.மு.க. செயலாளர் அ. செங்குட்டுவன், ஆசிரியர் வேலாயுதம் மன்றச் செயலாளர் ஜி. கே. மூர்த்தி, மாயூரம் வட்டத் தி.க. செயலாளர் ஆகியோர் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர்.

'நாணு — குணு' என அனைவராலும் அழைக்கப்படும் அன்னாருக்கு வயது 70.

மாவட்ட நிர்வாகச் சீர்திருத்தம்

அமைச்சர் ப. உ. சண்முகம் அறிவிப்பு

சென்னை, டிச. 26—

மாவட்ட நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும் — நிர்வாகத் தாமதங்களைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரில் சென்று விசாரணை நடத்தும் திட்டம் ஒன்றினை, வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் நிருபர்களிடம் விளக்கினர்; அவர் சொன்னதாவது :—

"மாவட்ட நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; குறிப்பாக நிலச் சீர்திருத்தச் சட்ட நடைமுறை, உணவு வழங்குத் துறை நிர்வாகம் ஆகியவற்றில் ஏற்படும் காலதாமதத்தைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வருவாய் வாரியத்தில் மாவட்ட நிர்வாகம் பற்றிய விவகாரங்களைக் கவனிக்கும் உறுப்பினர் — வருவாய்த் துறை செயலாளர் ஆகியோருடன் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று நேரில் கண்டறிவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்; இந்த வகையில், முதலாவதாக திருச்சிக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் சென்று விவாதம் நடத்துவோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு நாட்கள் வீதம் தங்கியிருந்து நிலைமைகளை ஆராய்ந்து — மாவட்ட நிர்வாகத்தில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு முன்னதாக, மாவட்ட நிர்வாகத்தில் எந்த வகையில் காலதாமதம் ஏற்படுகிறது — அதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற விவரங்கள் கேட்டு அறிக்கை அனுப்பப்படும்.

மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று விசாரணை நடத்தி, இந்தக் காலதாமதத்தை போக்கவும் — அரசு திட்டங்களை விரைந்து செயல்படுத்தி மாவட்ட நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், அந்தந்த இடத்திலேயே நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

பாகிஸ்தானில் உள்நாட்டுக் கிளர்ச்சி

குவெட்டா நகரில் கொந்தளிப்பு

பூட்டோவுக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் — துப்பாக்கிச் சூடு

இராவல்பிண்டி, டிச. 29—

பலுசிஸ்தான் கவர்னர் நியமனத்தை எதிர்த்துக் குவெட்டாவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன; ஒரு மாணவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், மற்றும் மூவர் காயமடைந்ததாகவும் பலுசிஸ்தான் அரசியல் தலைவர்கள் கூறினர்.

நகரில் பொது வேலைநிறுத்தம் நடப்பதாகவும், தேசிய அவாமி கட்சி ஊழியர்களுக்கும் — பூட்டோவின் மக்கள் கட்சி ஊழியர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டதாகவும் பலுசிஸ்தான் தேசிய அவாமி கட்சித் தலைவர் கூறினார்.

பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, 9 நாட்களுக்குமுன் பாகிஸ்தான் அதிபராகவும்—தலைமை இராணுவ நிர்வாகியாகவும் பதவியேற்றபின் தோன்றிய முதலாவது உள்நாட்டுத் தகராறு இதுவாகும்.

பலுசிஸ்தான் — வட மேற்கு எல்லை மாகாண கவர்னர்களின் நியமனத்தை பூட்டோ திரும்பப் பெறவேண்டும் அல்லது மாநில சட்டமன்றத்தைக் கூட்டி கவர்னரிடமிருந்து இராணுவ சட்ட நிர்வாக அதிகாரங்களை அகற்ற வேண்டும் என்றும் அவாமி கட்சி தலைவர் கான் அப்துல் வாலிகான் கோரினார்.

பலுசிஸ்தான் கவர்னராகவும்—இராணுவச் சட்ட நிர்வாகியாகவும் சர்தார் காஸ் பாக்ஷ் ரெய்ஸானி நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஊர்வலங்கள் நடந்தன.

கலெக்ஷன் நிதி!

"தமிழ்நாடு முதலமைச்சர் பாதுகாப்பு நிதி திரட்டுவதில் மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்.

"காலையிலிருந்து மாலை வரையில் பல இலட்சம் திரட்டுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

"அவர் கலெக்ஷன் நிதியாக இருக்கிறார்.

"ஆண்டவனின் ஆசீர்வாதம் நிரம்பப்பெற்று—நீண்ட நெடுங்காலம் அவர் வாழ வேண்டுமென்று விரும்புகிறேன்."

—அமைச்சர் அனுமந்தையா

(மதுரை மாநகராட்சி நிகழ்ச்சியில்)

'யாகியா கான் வழியில் செல்ல வேண்டாம்'

பூட்டோவுக்கு ஜெகஜீவன்ராம் கடும் எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 29—

"பாகிஸ்தானிடமிருந்து இன்னும் அமைதிக்கு அபாயம் இருப்பதால், மக்கள் விழிப்போடு இருக்கவேண்டும்.

'பாகிஸ்தானின் அறைகூவலைச் சமாளிப்பதற்காக இந்தியாவில் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியிலும் — பாதுகாக்கும் முயற்சியிலும் மெத்தனம் என்பது கூடாது.

"இந்தியாவின் தன்மானத்திற்கோ — ஒருமைப்பாட்டுக்கோ அபாயம் ஏற்படுத்தும் முயற்சியில் பூட்டோ இறங்கினால், யாகியா கானுக்குக் கிடைத்த கதிதான் அவருக்கும் கிடைக்கும்; அவருக்குத் தகுந்த பதில் அளிக்க எல்லையில் நமது போர் வீரர்கள் தயாராக இருக்கிறார்கள்"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டி எச்சரித்தார்.

மேலும் அவர் அமெரிக்காவின் போக்கு பற்றிக் கூறியதாவது :—

"இந்தியா — பாகிஸ்தான் போர் நடந்து கொண்டிருந்தபோது, வங்காளக் குடாக்கடலுக்கு அமெரிக்கா தனது 7-வது கடற்படையை அனுப்பியது; அதை அனுப்பும்போது, நிக்சனுக்குப் 'புதிய எண்ணங்கள்' இருந்தன; ஆனால், 7-வது கடற்படையைக் கண்டு இந்தியர்கள் ஊக்கம் தளர்ந்துவிடமாட்டார்கள் என்பது நிக்சனுக்குத் தெரியாது.

"போரை நிறுத்திய கவுரவத்தை இந்தியாவுக்கு அளிக்க நிக்சனுக்கு மனம் வரவில்லை; அதற்குப் பதிலாக தனது பரம விரோதியான இரஷ்யாவுக்கு அந்தக் கவுரவத்தை அளிக்க அவர் தயாராக இருக்கிறார்.

வரலாற்றிலேயே இல்லாதது

"இந்தியா — பாகிஸ்தான் போரில் இந்தியப் படைகள் வங்காள தேசத்தை விடுவித்தன; கார்கிலிலிருந்து கட்சு வரை பாகிஸ்தான் எல்லைக்குள்ளேயே போரிட்டன; ஓர் இலட்சம் பாகிஸ்தான் போர் வீரர்கள் இந்திய வீரர்களிடம் சரணாகதியடைந்தனர்; உலக வரலாற்றிலேயே இவ்வளவு பெரும் அளவில் போர் வீரர்கள் சரணாகதி அடைந்ததில்லை.

பழைய பொருள்கள் வேண்டாம்

"போர் வீரர்களுக்குப் பழைய பொருள்களை வெகுமதியாக அனுப்பிவைத்து அவர்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டாம் எனப் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்; 'தாய் நாட்டுக்காக எல்லை[illegible]ல் உயிரைத் திரணமாக மதித்துப் போரிட்டதற்கு மக்கள் நமக்குத் திருப்பிச் செய்வது இதுதானா' என்று போர் வீரர்கள் எண்ணிவிடக்கூடும்.

"எனவே, புதிய பொருள்களாக அனுப்புங்கள்; அப்படி அனுப்பும் நிலையில் நீங்கள் இல்லை என்றால் போர் வீரர்களைக் கவனிக்க அரசாங்கம் இருக்கவே இருக்கிறது."

பூட்டோவுக்கு வங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அது சுலபமான சந்திப்பாக இல்லை; ஆனால் மகிழ்ச்சியற்ற சந்திப்பு என்று சொல்ல முடியாது: நாங்கள் பேசினோம் — மறுபடியும் பேசுவோம்" என்று பூட்டோ கூறினார்.

பேச்சுவார்த்தையின் விவரங்களை வெளியிட பூட்டோ மறுத்துவிட்டார்; ஆனால், 'சென்ற புதனுக்குப் பிறகு பூட்டோவும் — முஜிபும் சந்தித்துப் பேசியிருப்பது இது இரண்டாவது தடவையாகும்' என்று அதிகார வட்டாரம் ஒன்று கூறுகிறது.

முஜிப்புடன் எவ்வளவு நாள் பேசக்கூடும் என்பதைப்பற்றிப் பூட்டோ எதுவும் தெரிவிக்கவில்லை; முஜிப் டாக்கா திரும்ப அனுமதிக்கப்படும் நிலைபற்றியும் எதுவும் பற்றிப் பூட்டோ கூறவில்லை; எனினும், வங்காள தேசத்துக்குச் சில நாடுகள் அங்கீகாரம் அளிக்கும் சாத்தியக்கூறு பற்றிக் குறிப்பிட்டார்.

கல்வி — உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன் நிகழ்ச்சிகள்

டிச. 30 காலை 9 மணி: இரும்பூதிப்பட்டி (கிருஷ்ணராயபுரம் தொகுதி) குடிநீர்த் தொட்டி அடிக்கல் நாட்டுவிழா; 10-15 மணி: பஞ்சப்பட்டி—மருத்துவமனை துணைக் கட்டட அடிக்கல் நாட்டுவிழா; 11-30 மணி: கிருஷ்ணராயபுரம்—உயர்நிலைப்பள்ளி அறிவியல் கூடம் அடிக்கல் நாட்டு விழா; பிற்பகல் 12-30 மணி: குச்சுப்பட்டி—பள்ளிக் கட்டடத் திறப்பு — புலியூர் சிமெண்டுத் தொழிற்சாலை விருந்தினர் இல்லம் செல்லல்; 4 மணி: புலியூர்—எம். ஜி. ஆர். மன்றம் அடிக்கல் நாட்டு விழா; மாலை 5-மணி: சின்னமநாயகன்பட்டி—ஆசிரியர் இல்லம் அடிக்கல் நாட்டு விழா; 6-30 மணி: மாயனூர்—பொதுமக்கள் வரவேற்பு இரவு 7-45 மணி: லாலாபேட்டை—பொதுமக்கள் வரவேற்பு.

தமிழகத்தின் தானைத் தலைவராகத் தமிழக முதல்வர் கலைஞர்

மதுரை, டிச. 28—

"இன்பகரமான உள்ளக் கிளர்ச்சிகளை எழுப்பும் காட்சிகளை கண்ணுற்றேன்; மதுரை மூதூரிலிருந்தும் — சுற்றுப்புறங்களிலிருந்தும் மக்கள் இவ்வாறு வெற்றியைக் கொண்டாடுவது சாலப் பொருத்தமாகும்.

"தலைவர் — தனிப்பெரும் தலைவர் கருணாநிதியிடம் தமிழ் மக்கள் காட்டிய அன்பைப் பார்த்ததில் மிகவும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்; நீங்கள் — உங்கள் அறிவியல் திறத்தால் வியத்தகு சாதனைகளைப் புரிந்திருக்கிறீர்கள்.

"இந்த மக்கள், மாபெரும் தலைவர்களை எப்படிப் பாராட்டுவது என்பதை நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்.

"ஒரு படை — அதன் தளபதி சரியாக இல்லாமல் எப்படிச் செயல்பட முடியாதோ அப்படி — நல்ல தலைவர்கள் இருக்குமாறு செய்வது மக்கள் பொறுப்பு; இன்று நாம் பெரிய பாக்கியம் செய்திருக்கிறோம்; மாநிலரீதியாக கருணாநிதி போன்ற தலைவர்கள் இருப்பதும், இந்திய அளவில் இந்திரா காந்தி போன்ற தலைவர்கள் இருப்பதும் நாம் செய்த பெரிய அதிருஷ்டமாகும்.

"ஒருவர் தானாகத் தளபதி ஆக முடியாது; மக்கள்தான் ஒருவரைத் தளபதி ஆக்க முடியும்' என்று நெப்போலியன் சொன்னான்.

"மகாத்மா காந்தி போன்ற மாபெரும் தலைவர்களை இந்தியா எப்படி உருவாக்கியதோ, அப்படி, உங்கள் தமிழகமும் தலைவர்களை உருவாக்கியிருக்கிறது.

"இந்தியாவில் உள்ள முதல்வர்களில் போட்டி வைத்தும் பார்த்தால் — 'மாநில முதல்வர்களில் யார் சிறந்தவர்' என்று போட்டி வைத்துப் பார்த்தால் — அந்தப் பரிசை உங்கள் கருணாநிதிதான் பெறுவார்; அவருக்குத்தான் நான் அதை அளிப்பேன்.

"அவர், தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் — அவருடைய பணியின் மூலம் — இந்தியாவுக்கே பெரிய சாதனை செய்ய ஏதுவாக இருக்கும்.

'நீங்கள் உங்கள் செயலின் மூலம் கருணாநிதியைப் பின்பற்றி வருகிறீர்கள் என்பதைக் காட்டிவருகிறீர்கள்.

"தலைமையமைச்சர் இந்திரா காந்தி பெற்ற வெற்றிக்காக அவரைப் பாராட்டி நடந்த கூட்டத்தில், எதிர்க் கட்சிகளின் பெருந்தன்மைக்கு நன்றி கூறினார்; ஜனசங்கம் — கம்யூனிஸ்டு — சோஷலிஸ்டு ஆகிய எல்லாக் கட்சித் தலைவர்களும் தலைமை அமைச்சரைப் பாராட்டினர்; ஆனால், அன்று தி.மு.க. குழுத் தலைவர் மனோகரன் அவர்கள் பேசிய பேச்சே சாலச் சிறந்ததாக விளங்கியது; இப்படிப் பெருந்தன்மையுடன் எதிர்க் கட்சிகள் நடந்து கொள்ளும்வரை நமக்கு ஒரு குறையும் வராது."

—மத்திய அமைச்சர் அனுமந்தையா

(மதுரைப் பொதுக்கூட்டத்தில்)

எல்லையில் மீண்டும் வாலாட்டம்

12 மணி நேரச் சண்டையில் எதிரிகள் ஓட்டம்

ஜெய்ப்பூர், டிச. 28—

இராஜஸ்தானில் உள்ள கங்கா நகர் முனையில் நாச் பகுதியில் இந்தியா — பாகிஸ்தான் துருப்புக்களுக்கிடையே நேற்று நடந்த பெரிய சண்டையில் இரு இந்திய இராணுவ மேஜர்களும் 4 ஜவான்களும் கொல்லப்பட்டனர்.

நேற்றிரவு பீரங்கிகளால் கடுமையாகச் சுட்டு — அதன் உதவியுடன் இந்தியப் பகுதியைப் பாகிஸ்தான் துருப்புக்கள் தாக்கின; அந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது; பகைவனுக்குப் பலத்த சேதமும் ஏற்படுத்தப்பட்டது.

6 பாகிஸ்தான் சிப்பாய்களை நமது துருப்புக்கள் சிறைபிடித்தன; அவர்களில் ஒருவர் பலத்த காயமடைந்து இறந்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி கடந்த சனிக்கிழமையன்று கங்காநகர் பகுதியில இந்தியக் காவல் நிலைகள்மீது பாகிஸ்தான் துருப்புக்கள் பீரங்கிகளால் சுடத் தொடங்கின.

ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது மீறல் நடந்தது; நமது இராணுவம் திருப்பிச் சுட்டுப் பகைவனின் பீரங்கிகளை ஒடுக்கியது.

மூன்றாவது மீறல் நேற்று நடந்தது; நாகியில் உள்ள நமது நிலைகள்மீது பகை பீரங்கிகள் மீண்டும் சுட்டன; பீரங்கிகளின் து[illegible]டன் முழுவதும் பாகிஸ்[illegible] துருப்புகள் தாக்கின.

நமது துருப்புக்கள் பகை பீரங்கிகளை ஒடுக்கியதுடன் — பகைவனின் படைத் தாக்குதலையும் முறியடித்தன; எதிரிக்குப் பலத்த உயிர்ச் சேதம் உண்டாக்கப்பட்டது.

டிச. 17-ம் நாள் ஏற்பட்ட போர் நிறுத்தத்துக்குப் பிறகு 12 மணி நேரம் நடந்த இந்த முதல் பெரிய சண்டையில், நமது போர் வீரர்கள் 29 பேர் காயமடைந்தனர்.

குடும்ப நலத் திட்ட விழா — முதல்வர் கலைஞர் பேசுகிறார்

குடும்ப நலத் திட்ட இரு வார விழாவையொட்டி, 29—12—71 மாலை 6-மணிக்கு சென்னை — இராயபுரம் இராபின்சன் பூங்கா அருகிலுள்ள மாநகராட்சித் திடலில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நிறைவு விழாச் சொற்பொழிவாற்றுவார்.

இவ்விழாவுக்கு மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமை வகிப்பார்.

திரு மு. வேதாசலம் எம்.எல்.ஏ., திரு. ஜே. ஏ. அம்பாசங்கர் ஐ ஏ எஸ். ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

முஜிபுர் ரகிமானுடன் சந்திப்பு

செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுமதி

இராவல்பிண்டி, டிச. 29—

"சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஷேக் முஜிபுர் ரகிமானைச் சந்திக்க அனுமதிக்கப்படுவார்கள்" என இங்குள்ள நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

முஜிபுர் ரகிமான் உடல் நலத்துடன இருக்கிறாரா என்பதை அறிந்து கூறுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தை வங்க தேச அரசு கேட்டுக்கொண்டிருப்பதாக வங்காள தேசத் தலைமை அமைச்சர் தாஜுதீன் அகமது டாக்காவில் கூறினார்.

இஸ்ரேலுடன் போர்?

கெய்ரோ, டிச. 29—

"மத்தியக் கிழக்கில் போர் மூளுவதைத் தவிர்க்க முடியாது; அரபு — இஸ்ரேல் தகராறுக்கு இராணுவத் தீர்வு தவிர வேறு வழியில்லை"

என்றும், எகிப்தின் வெளிநாட்டு அமைச்சர் முகம்மது ரியாச், அரபு வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இந்த மாநாட்டில், சில இரகசிய முடிவுகள் செய்யப்பட்டதாக கெய்ரோ வானொலி அறிவித்தது.

ஜின்னா மீது திடீர் பக்தி

"அரசு அலுவலகங்களில் என் படங்களை வைக்க வேண்டாம்" என்று உத்தரவு ஒன்றைப் பூட்டோ பிறப்பித்திருக்கிறார்; அதற்குப் பதில் ஜின்னா படங்களை வைக்குமாறு கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அமுதம் அச்சகத்தில் (24, [illegible] செங்குத்[illegible] தெரு, சென்னை-18), அச்சிட்டு வெளியிடுவது.